

முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டம், உதகை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் அமுதம் நியாய விலைக்கடையில் தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், ரொக்கத்தொகை தலா ரூ.3,000/மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்பினை அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, உதகை சட்டமன்ற உறுப்பினர் கணேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், உதகை நகர்மன்றத் தலைவர் திருமதி.வாணீஸ்வரி நகர்மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர்கள் ஜார்ஜ், விசாலாட்சி மற்றும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பரமேஷ் குமார், செயற்குழு உறுப்பினர்கள்இளங்கோவன் தம்பி இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, பொதுக்குழு உறுப்பினர் மோகன் குமார், நகர மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பெருநாவலூர், அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், உயர்கல்வித் துறை சார்பில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தின்கீழ், மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று முன்தினம் (08.01.2026) வழங்கினார்கள். உடன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், நகர்மன்ற துணைத் தலைவர் .தி.முத்து (எ) சுப்ரமணியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# சேலத்தில் 10.88 லட்சம் பேருக்கு பொங்கல் தொகுப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கி பேச்சு!



சேலம், ஜன. 10 –

முதலமைச்சர் அவர்கள் சென்னையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணியினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் மாவட்டத்தில் உள்ள 10,88,238 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியினை துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்கள் சென்னையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணியினைத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று முன்தினம் (08.01.2026) சேலம், கன்னங்குறிச்சி நியாய விலைக்கடையில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணியினை துவக்கி வைத்தார்கள்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் அவர்கள், தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர்களுக்கு பொங்கள் பரிசு தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பும். ரொக்கப் பரிசாக ரூ.3000/ வழங்கிட அறிவித்து இன்றைய தினம் தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதன்படி பொங்கல் திருநாளை முன்னிட்டு, வேட்டி மற்றும் சேலை இலவசமாக வழங்கப்படவுள்ளன. பொங்கல் பரிசு தொகுப்பு பொருளான பச்சரிசி 1 கிலோ ரூ.25/ம், சர்க்கரை 1 கிலோ ரூ.48.54/ம், முழு நீளக் கரும்பு ஒன்றுக்கு ரூ.38/ம் ஆக மொத்தம் ஒரு குடும்ப அட் டைக்கு ரூ.111.54 மதிப்பில் மொத்த குடும்ப அட்டைகளுக்குரிய செலவின மதிப்பு ரூ.248.66 கோடி ஆகும். மேலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகை ரூ.3000/ வீதம் மொத்தம் ரூ.6936.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் உள்ள 10.87.256 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் 982 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 10,88,238 குடும்பங்களுக்கு ரூ.12.14 கோடி மதிப்பில் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் பொங்கல் பரிசு ரொக்கம் வழங்குவதற்காக ரூ.326.47 கோடி வழங்கிட நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டு இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பொங்கல் பரிசு, நகர்புறப் பகுதிகளில் முதல் நாள் முற்பகல் 100 பேருக்கும் பிற்பகல் 100 பேருக்கும் மற்றும் இரண்டாம் நாள் முதல் நாள் ஒன்றுக்கு 300 (முற்பகல் 150, பிற்பகல் 150) குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கும் வகையில் குடும்ப அட்டைதாரர்களின் வீட்டிற்கே சென்று நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் மூலம் டோக்கன் வழங்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் 08.01.2026 முதல் 14.01.2026 வரை பொங்கல் பரிசு தொகுப்பு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும். பொங்கல் பரிசு டோக்கனில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களின் படி, குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைக்கு சென்று பெற்றுக்கொண்டு தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், தமிழ்நாடு அரசு தூய்மை பணியாளர் நல வாரியத் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி.வெ. ஆறுச்சாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண் இயக்குநர் மா.குழுந்தைவேலு, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராஜ்குமார் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இதுவரை ரூ.6 கோடியே 39 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 39 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 08-01-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | டி.சுந்தர்ராஜ், செங்குடி, வழுவூர் அஞ்சல், குத்தாலம் வட்டம், மயிலாடுதுறை | – 25,000/– |
| 2. | உ.மருதையன், கோவில்வெண்ணி, நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் | – 25,000/– |
| 3. | என். கலியமூர்த்தி, அழகியமணவாளம் பெரியார் நகர், திருமானூர், திருச்சி | – 25,000/– |
| 4. | சி. கலியமூர்த்தி, திருவெங்கனூர் கிராமம், வடுகபாளையம் மஜரா, அரியலூர் | – 25,000/– |
| 5. | ஆர்.பாலு, நடுத் தெரு, எடப்பாடி, சேலம் மாவட்டம் 637 101. | – 25,000/– |
| 6. | கு.சண்முகசுந்தரம், 7வது வார்டு, பாண்டமங்கலம், நாமக்கல் மாவட்டம். | – 25,000/– |
| 7. | எம். ஜாபர் அலி, மதருசா வீதி, ஆனைமலை, கோவை மாவட்டம். | – 25,000/– |
| 8. | பெ.சுப்பிரமணியம், தா.காளிபாளையம், தாராபுரம், திருப்பூர் மாவட்டம். | – 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |



சேலம் கிழக்கு மாவட்டம் பனமரத்துப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட நியாய விலைக் கடையில் தமிழக அரசின் பொங்கல் தொகுப்பு மற்றும் ரொக்கம் 3000 / கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி, பொதுமக்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் க.சுரேஷ்குமார், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் டாக்டர் தருண், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர் உமா சங்கர், பேரூர் செயலாளர் ரவிக்குமார் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


## 49வது சென்னைப் புத்தகக் காட்சி

## “கலைஞர் கருவூலம்”

## விற்பனைக் கூடத்தில்

## தலைமைக் கழக வெளியீடுகள்

49வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2026 ஜனவரி 8 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.

புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 279ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.

தலைமைக் கழகம்,
தி.மு.க.